1986 மே 13]

அரசு மருத்துவ மனைகளில் நிர்வாக அலுவலர்கள்

768—(*வினா எண். 5707)— திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை, தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம் போன்ற பெரிய அரசு மருத்துவமனைகளில் நிர்வாக அலுவலர் (Administrative Officers) பதவிகள் ஏற்படுத்துவது பற்றி அரசிடம் கருத்துரு ஏதாவது உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : கோயம்புத்தூர், தஞ்சாவூர், மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் நிர்வாக அதிகாரி பணியிடம் (Post of Administrative Officers) உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. சேலம் மாவட்டம் மருத்துவ மனையை பொறுத்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மருத்துவமனையில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நிர்வாக அலுவலர் பதவி, மருத்துவமனையில் முதல்வர் போன்றவர்க்கு உதவியாக இருக்கக்கூடிய பதவியாகும். மூன்று மருத்துவ மனைகளில் இருப்பது போல் சேலம் மருத்துவ மனையில் நியமிக்கின்ற செயற் குறிப்பை இனிமேலாவது அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற் கட்டமாக கவர்ன்மெண்ட் ஸ்டான்லி மெடிக்கல் ஹாஸ்பிடலில் அண்டர் செக்கரட்டரி கிரேடில் ஒருவரும், கவர்ன்மெண்ட் ஜெனரல் ஹாஸ்பிடலில் அண்டர் செக்கரட்டரி கிரேடில் ஒருவரும, ராயப் பேட்டை மருத்துவ மனையில் டெப்டி கலெக்டர் கிரேடில் ஒருவரும், கவர்ன்மெண்ட் கீல்பாக் மெடிக்கல் ஹாஸ்பிடலில் லே செக்ரட்டரி அண்டு டிரஷரி கிரேடில் ஒருவரும் என்கின்ற வகையிலும், ராஜாஜி மருத்துவ மனையில் அண்டர் செக்கரட்டரி கிரேடில் ஒருவருமாக நாம் 5 இடங்களில் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர்களை நியமித்திருக்கிறோம். அது போதாது என்று செயற் குறிப்பு சொல்லுகின்ற நேரத்தில் இன்னும் சில இடங்களில் ஏற்கனவே சொன்னமாதிரி கோவை தஞ்சை மற்றும் நெல்லை மருத் துவ மனைகளில் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர்களை அங்கே ஏற்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். டீன்கள் மூலமாக நிர்வாகத்தை முழுவதுமாக இயக்கமுடியவில்லை என்பதால்தான், இவர்கள் தேவைப்படுகிறார்கள். ஆகவேதான் நிர்வாகத் துறையைப் பொறுத்தவரையில் மேற்

பார்வை செய்ய அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர்களை ஈடுபடுத்த வேண்டும் என்ற புதிய திட்டத்தை தமிழக சர்க்கார் கொண்டு வந்திருக்கிறது. 3 இடங்களில் அதை ஏற்படுத்திய பிறகுதான சேலததை பற்றி சிந்திக்க முடியும்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையில் தற்காலிகமாக எவ்வளவு ஊழியர்கள் பணி புரிகிறார்கள்? நிரந்தரமாக எவ்வளவு ஊழியர்கள் பணி புரிகிறார்கள? தற்காலிகமாக வேலை செய்யும் ஊழியர்களை நிரந்தரமாக்க செயற் குறிப்பு அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை பேர் இருக்கிறார்கள் என்ற விவரம் இப்போது என்னிடத்திலே இல்லை; ஏனென்றால் இது தொடர்பு இல்லாத கேள்வியாக இருப்பதால். இருந்தாலும் அரசாங்கத்தினுடைய விதிமுறைகளுக்கு உட்பட்டு நாம் தற்காலிகமாக இருக்கக்கூடியவர்களை நிரந்தரமாக ஆக்கக்கூடிய பணியில் ஈடுபட்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இருக்கக்கூடிய டீன்களின் வேலைப்பளு அதிகமாகி அவர்கள் டீச்சிங் வேலையைச் சரியாகச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு இருப்பதால், அந்த இடத்தில் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீஸர்கள் இருக்கவேண்டும், என்ற அடிப்படையில் அண்டர் செக்ரட்டரி போன்ற கேடரில் ஆஃபீசர்கள் போடப்பட்டு அந்தக் கல்லூரியின் வசதிகளை உறுதிப்படுத்தவும், அதிகப்படுத்தவும், அந்த வகையில் டீனுடைய பொறுப்புக்களை முறையாகச் செய்து மருத்துவமனை நிர்வாகத்தைச் சீரமைக்கவும் ஏற்படுத்தப்படக்கூடிய நடவடிக்கை என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது சரியானது. இரண்டு வருஷங்களுக்கு முன்பிருந்தே கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இவ்வாறு ஒருவரை நியமிக்கவேண்டும் என்று நான் அவருக்கு கடிதங்கள் எழுதி இருக்கிறேன். எனவே, இனிமேலாவது காலதாமதம் இல்லாமல், குறிப்பிட்ட காலத்திற்குள் அப்படிப்பட்ட ஒரு கேடரை அங்கே நியமிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்கு பதில் சொல்லும்போதே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் மன நிறைவு அடையக் கூடிய அளவுக்குத்தான் அந்தக் கருத்தும் அதிலே அடங்கி இருக்கிறது. கோவை, தஞ்சை மற்றும் நெல்லை மருத்துவமனைகளில் அவ்வாறு ஒரு நிர்வாக அதிகாரி போஸ்ட்டை அதாவது அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆஃபீசர்ஸ் போஸ்ட்டை உருவாகக்

1986 மே 13]

வேண்டும் என்ற செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்று சொல்லியிருக்கிறேன். வெகு விரைவில் அதை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே வெகு விரைவில் ஏற்படுத்தப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. என். முருகானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் மற்றும் செஞ்சி அரசு மருத்துவமனைகளில் தண்ணீர் இல்லாததால் நோயாளிகள் மருத்துவமனைகளில் சேரும்போதே கையில் தண்ணீரைக் கொண்டு வர வேண்டும் என்ற நிலைமை இருந்து வருவதை அரசு அறியுமா? அந்த அவல நிலையைப் போக்க அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றாலும், இந்தக் கேள்வி அனுமதிக்கப் பட்டுவிட்ட காரணத்தால் நான் தெளிவுபடுத்துகிறேன். டவுன் போர்ட் மூலமாகத் தொடர்பு கொண்டு திண்டிவனம் மருத்துவ மனைக்குத் தண்ணீர் வசதி ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி யிருக்கிறோம். அங்கே கிணறு வெட்டிப்பார்த்தும் தண்ணீர் வரவில்லை. மிகவும் பிரச்சினையுள்ள இடம் அது. அந்த இடத்தைப் பொறுத்தவரையில் வாட்டர் ஷார்ட்டேஜ் என்பது பல ஆண்டுகளாக இருந்து வருகிற இடம். அங்கே தண்ணீர் டேங்குகள் மூலமாக, தொட்டிகள் மூலமாக, லாரிகள் மூலமாகத் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாநகராட்சியிடம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதைச் செய்வதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே அங்கே சுமுகமான நிலைமை ஏற்படக்கூடும் என்று நான் நினைக்கிறேன்.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் எழுப்புகிற கேள்விக்கும், இதற்கும் தொடர்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிற சாத்தியக்கூறு இருந்தாலும், தஞ்சை மருத்துவமனையில் நெடுஞ்சாலைத்துறையில் பணியாற்றுகிற தர்மராஜ் என்பவருடைய மகனுக்கு, 6 வயது மகனுக்கு காலிலே ஏற்பட்ட............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொடர்பற்ற இக்கேள்விக்குப் பதில் அமைச்சரிடத்தில் இருக்காது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கேள்விக்குப் பதில் கூறப்பட்ட காரணத்தால்தான் இந்தக் கேள்வியை நான் எழுப்புகிறேன். பல இடங்களில் மருத்துவ மனைகளில் தண்ணீர் இல்லாமல் இருக்கின்ற நிலைமை இருப்பதால் நோயாளிகளுக்குக் குடிநீர் கூட இல்லாமல் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. இதன் காரணத்தால் அங்கேயுள்ள வார்டு

களில் இருக்கின்ற படுக்கைகள் எல்லாம் சுருட்டி வைக்கப்பட்டு அந்த மருத்துவ மனைகளே உபயோகமற்றுப்போய் இருக்கின்ற சூழ்நிலையில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். சேலம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது இரண்டு மருத்துவ மனைகளில் அப்படிப்பட்ட நிலைமை இருப்பதைப் பார்வையிட்டார்கள். அதற்கு உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுக்க இருக்கிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தண்ணீர் பிரச்சினை என்பது பொதுவாக பல மருத்துவமனைகளில் ஏற்பட்டு இருக்கக்கூடிய பிரச்சினையாகும். போர்க்கால அடிப்படையில் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தின் மூலமாக இலாகாவிற்கு நாம் ஆணையிட்டு இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நா. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மருத்துவமனையில் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆஃபீஸர் என்ற நிர்வாக அலுவலர் பதவி விரைவில் ஏற்படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது காலில் மருத்துவர்கள் ஆப்பரேஷன் செய்யவேண்டுமென்றால் தலையில் ஆப்பரேஷன் செய்கிறார்கள். அந்த அளவுக்குக் கவனக் குறைவாகவும், மெத்தனமாகவும் இருக்கிறார்கள். தஞ்சையில் அண்மையில் கூட சுரேஷ் என்ற பையனுக்கு காலில் இருக்கின்ற கட்டியை அகற்றுவதற்குப் பதிலாக சிறுநீரகத்தில் அடைப்பை நீக்குகின்ற ஆப்பரேஷன் செய்திருக்கிறார்கள். இந்த அளவுக்கு மருத்துவர்கள் சிரமப்படுகிறார்கள். ஆகவே அவர்களுடைய பளுவைக் குறைக்கிற வகையில் மிக விரைவாக ஒவ்வொரு மாவட்ட தலைமை மருத்துவ மனையிலும் அட்மினிஸ்ட்டிரேட்டிவ் ஆஃபீசர்ஸ் என்ற பதவியை உடனடியாக ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியிருக்கக்கூடிய கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. அவர்கள் அங்கே மருத்துவமனையிலே நடைபெற்றிருக்கக் கூடிய ஒரு நிகழ்ச்சியைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்திற்கும் அட்மினிஸ்ட்டிரேடிவ் ஆபீசர்களைப் போடுவதற்கும் எந்தவித தொடர்பும் இல்லை. அது மருத்துவத்திலே ஒரு மருத்துவர் செய்திருக்கக்கூடிய ஒரு தவறு. அந்த மருத்துவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். அதாவது தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அது மட்டும் அல்ல. என்குயரியும் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே அட்மினிஸ்ட்டிரேடிவ் ஆபீசர் நியமனத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை..................

(மணியடிக்கப்பெற்றது).

1986 மே 13]

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள் — விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அட்மினிஸ்ட்டிரேட்டிவ் ஆபீசர்களைப் பொறுத்தவரையில், அந்த மருத்துவமனை முழுவதையும் நிர்வாகம் செய்யக் கூடிய பணிகளைத்தான் அவர்கள் செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால் மருத்துவத் துறை என்னும் அந்தப் பகுதியிலே, As far as the treatment is concerned, it is the duty of the Doctors to do the treatment. அதை டாக்டர்கள் தாம் செய்வார்கள். ஆகவே, நிர்வாகப் பொறுப்பிற்கு போடக்கூடிய அதிகாரிக்கும் இதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. பொன்னுசாமி: பெருமைபெற்ற பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவ மனைகளிலே அண்டர் செகரட்டரி கேடரிலே அந்த நிர்வாக அலுவலர்களைப் போட இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களே. ஒரு மருத்துவர் இப்போது எம்.பி.பி.எஸ். படித்தவர்கள் எல்லாம் கூட நிர்வாகத் திறமையில் ஐ.ஏ.எஸ். அளவிற்கு திறமை பெற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இதுபோன்ற நிர்வாகம் செய்யும் பதவிகளுக்கு அந்த மருத்துவர்களையே நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் மருத்துவர்களின் சங்கத்திலேயிருந்து வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். ஆகவே இதுபோன்ற பதவிகளுக்கு மருத்துவர்களையே நியமனம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு அருமையான யோசனை. நான் கூட இது பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் மருத்துவர்களுக்கு நிர்வாகத் துறையிலேயும் நல்ல பயிற்சி இருக்க வேண்டும். அப்படி நல்ல பயிற்சி கொடுக்கக்கூடிய நிலைமையை உருவாக்கினால் இன்னும் சிறப்பாக இருக்கும். வெளிநாட்டிலே கூட பல்வேறு இடங்களில் இப்படி எக்ஸ்பெரிமெண்ட் செய்து பார்க்கிறார்கள். அமெரிக்கா போன்ற பல்வேறு நாடுகளில் கூட அப்படி டாக்டர்கள் அல்லாதவர்கள் நிர்வாகத்தை நடத்துவதாக தகவல் இருக்கிறது. அங்கே கூட அது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு ஆராய்ச்சிக்கு உரிய விஷயம். This has to be examined in depth என்று சொல்லவேண்டும். ஆகவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் எழுப்பியிருக்கக்கூடிய கேள்வி நியாயமான கேள்வி. நிச்சயமாக

அந்த வகையிலே கூட நாம் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, பரீட்சார்த்தமாக ஓரிரு இடங்களில் நியமிக்கலாம் என்று கூட என் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்கிறபோது பல அரசு மருத்துவமனைகளில் தண்ணீர் இல்லாத காரணத்தினாலே அவைகளை விரிவுபடுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இப்போது வறட்சிப் பணிகளின் கீழ் பல்வேறு இடங்களில் பொதுவாக கிணறுகள் அமைத்துக் கொடுக்கின்ற பணிகள் நடைபெற்று வருகிற காலக் கட்டத்தில், அப்படிப்பட்ட ஆஸ்பத்திரிகளின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, அந்த டிரவுட் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு, தண்ணீர் வசதிகளை அந்தந்த ஆஸ்பத்திரிகளில் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படி வறட்சிப் பணிகளின் கீழ் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிற இந்த நேரத்திலே, எந்தெந்த மருத்துவமனைகளிலே தண்ணீர் இல்லையோ அந்த மருத்துவமனைகளுக்கு முதலில் முக்கியத்துவம் அளித்து தண்ணீர் வசதியைத் தரவேண்டும் என்று அரசாங்கம் ஏற்கெனவே சொல்லி இருக்கிறது. நான் கூட பல அதிகாரிகளிடமும் சொல்லியிருக்கிறேன். மாவட்ட கலெக்டரிடத்திலே கூட மருத்துவமனைகளில் தண்ணீர் இல்லை என்ற பிரச்சனை எங்கு இருக்கிறதோ அதை முதலில் தீர்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அந்தந்த மருத்துவமனைகளில் இருக்கக் கூடியவர்களும் மாவட்ட கலெக்டரிடம் தொடர்புகொண்டு அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துக் கொள்ள வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறேன்.

கருத்தடை அறுவை சிகிச்சைகள்.

769—(*வினா எண். 7195) திரு மா. மணிமாறன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984–85-ல் கருத்தடை அறுவை சிகிச்சைகள் திருமணம் ஆகாதவர்களுக்கும் செய்யப்பட்டுள்ளதாக அரசிற்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே: (அ) ஆம். இரண்டு புகார்கள் வந்துள்ளன.